*7*

# மில்லேனியம், ஆயிரம் ஆண்டு அரசாட்சி

*இயேசு பரலோகத்திற்கு ஏறிச் சென்றது போலவே அவர் மீண்டும் வருவார் என்பதும் நிச்சயமான விஷயமாக உள்ளது (யோவா. 14:3; அப். 1:11). அவரது மறுவருகைக்குப் பின்பு என்ன நடைபெறும்? ஒரு ஆயிரம் ஆண்டு ஆளுகை என்று சொல்லப்படக்கூடிய இயேசுவின் அரசாட்சி நடைபெறுமா? ஆயிரம் ஆண்டுகள் என்பது நேர்ப்பொருளில் ஒரு ஆயிரம் ஆண்டுகள் இயேசுவின் அரசாட்சி நடைபெறும் என்று குறிக்கிறதா அல்லது இது கால வேளையின் அடையாளத்துவமாக உள்ளதா? அவர் எருசலேமில் தாவீதின் அரியணையில் வீற்றிருந்து பூமியை ஆளும்படிக்கு, ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்துவதற்காக வெற்றிகொள்ளும் முடியரசராகத் திரும்பி வருவாரா? இயேசுவை யூதர்கள் புறக்கணித்தனர் என்பதற்காக அவர் தேவனுடைய ராஜ்யத்திற்குப் பதிலாக சபையை ஏற்படுத்தினாரா?*

*மில்லேனியம் அல்லது ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சியைப் பற்றிய கலந்துரையாடலில் பெரும்பாலானவற்றை உண்டாக்குகிற வசனப்பகுதி யாக இருப்பது வெளி. 20:1-10 ஆகும்:*

> *ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக் கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக் கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான். அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாக வேண்டும்.*
>
> *அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன், அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும்*

உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல். முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.

அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான்; அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களை பட்சித்துப்போட்டது. மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்.

இவ்வசனப்பகுதியில் ஆயிரம் ஆண்டு அரசாட்சி என்பது குறிப்பிடப்பட்டுள்ளது என்பது நிச்சயம், ஆனால் அந்த ஆயிரம் ஆண்டு அரசாட்சி என்பது என்ன? அது எங்கே எப்போது நடைபெறும்? அந்த ஆயிரம் ஆண்டுகளும் யார் ஆட்சி செய்வார்? ஆயிரம் ஆண்டு அரசாட்சி என்பது நேர்ப்பொருளானதா அல்லது உருவகமானதா?

ஆயிரம் ஆண்டு அரசாட்சி பற்றிய பிரதானமான மூன்று கண்ணோட்டங்கள் ஒவ்வொன்றிலும் எண்ணற்ற மாறுபாடுகள் காணப்படுகின்றன. அவைகள் ஆயிரம் ஆண்டு அரசாட்சியுடன் கொண்டுள்ள நாளாகம உறவுமுறைப்படி வகைப்படுத்தப்படுகின்றன: (1) ஆயிரம் ஆண்டு பின் அரசாட்சிக் கொள்கை, (2) ஆயிரம் ஆண்டு அரசாட்சி இல்லை என்ற கொள்கை மற்றும் (3) ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கை.

ஆயிரம் ஆண்டு பின் அரசாட்சிக் கொள்கை என்பது, கிறிஸ்தவ யுகத்தின் உருவகமாக உள்ள ஆயிரம் ஆண்டுகள். இதில் இயேசு தற்கால உண்மை நிலையில் ஆளுகின்றார், அவரது மறுவருகையுடன் இது முடிவடையும், மரித்தோரின் உயிர்த்தெழுதலும் கடைசி நியாயத்தீர்ப்பும் வரும் என்ற கண்ணோக்குடையதாகும். இதில் சிலர் மாறுபட்ட கருத்தைக் கொண்டவர்களாய், ஆயிரம் ஆண்டுகள் என்பது கிறிஸ்தவ யுகத்தின் பிற்பகுதியில் சமாதானம் மற்றும்/அல்லது நீதியின் நீண்ட காலத்திற்கு உருவகமாக உள்ளது, அதைத் தொடர்ந்து இயேசுவின் மறுவருகை இருக்கும் என்று நம்புகின்றனர்.

ஆயிரம் ஆண்டு அரசாட்சி இல்லை என்ற கொள்கை என்பது, “ஆயிரம்” என்றால் முழுமையின் உருவகம் மற்றும் இது நேர்ப்பொருளில் ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சி என்று நினைக்கப்படக்கூடாது என்ற கண்ணோக்குடையதாக உள்ளது. ஆயிரம் ஆண்டு பின் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் போலவே, இந்தக் கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளவர்களும்

இயேசுவின் மறுவருகை, உயிர்த்தெழுதல் மற்றும் கடைசி நியாயத்தீர்ப்பு ஆகியவற்றை நம்புகின்றனர்.

ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கை என்பது, இயேசு பூமிக்குத் திரும்பி வந்து, மரித்தோரின் பொதுவான உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு நாளுக்கு முன்பு எருசலேமில் தாவீதின் அரியணையில் வீற்றிருந்து ஆயிரம் ஆண்டுகள் அரசாளுவார் என்ற கண்ணோக்குடையதாக உள்ளது. இந்தக் கண்ணோக்கை ஆதரிப்பவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையுடன் இணைந்துள்ள நிகழ்ச்சிகள் பற்றி பிரிவினைக் கருத்துக்களைக் கொண்டுள்ளனர். இவர்கள் யாவருமே இரண்டு உயிர்த்தெழுதல்கள் நடைபெறும் என்று நம்புகின்றனர்; அதாவது, "ஆயிரம் ஆண்டுக்கு" முன்பு நீதிமான்களாயிருந்து மரித்தவர்களின் உயிர்த்தெழுதலும் மற்றும் "ஆயிரம் ஆண்டுக்கு" பின்பு துன்மார்க்கராயிருந்து மரித்தவர்களின் உயிர்த்தெழுதலும். இந்தக் குழுவினருக்குள் இருக்கின்ற யுகத்துவவாதிகள், எல்லா தீர்க்கதரிசனங்களும் நேர்ப்பொருளில் இஸ்ரவேலர்களுக்கே உரியவை, அவைகள் சபைக்குரியவைகள் அல்ல என்று நம்புகின்றனர், சபையை இவர்கள் தேவனுடைய இஸ்ரவேலர் என்று கருதுவதில்லை. இவர்களுக்குள் இருக்கின்ற வரலாற்று ரீதியான ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள், சபையைத் தேவனுடைய இஸ்ரவேலர் என்று ஏற்றுக்கொள்கின்றனர்.

## வெளி. 20:1-10 எதைக் கூறுவதில்லை

வெளி. 20:1-10 வசனப்பகுதி கவனமாக வாசிக்கப்பட்டதென்றால், ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்கான அடிப்படை வாதங்கள் இவ்வசனப்பகுதியில் இல்லை என்பது காணப்படும்:

(1) இது இயேசு பூமிக்குத் திரும்ப வருவதைக் குறிப்பிடுவதில்லை. அவரது மறுவருகை என்பது இவ்வசனப்பகுதியில் அக்கறைக்குரிய விஷயமாக இருப்பதில்லை.

(2) இது இயேசு பூமியின்மீது அரசாளுவார் என்று கூறுவதில்லை. ஆளுகை செய்யும் இடம் இதில் குறிப்பிடப்படுவதில்லை.

(3) இது இயேசு ஆயிரம் ஆண்டுகள் அரசாளுவார் என்று கூறுவதில்லை. பரிசுத்தவான்கள் ஆளுகை செய்யும் கால அளவு மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது.

(4) இது இரத்த சாட்சிகளாக மரித்த பரிசுத்தவான்களின் ஆளுகை என்பது பூமிக்குரிய ஆளுகையாயிருக்கும் என்று கூறுவதில்லை. ஆளுகை செய்யும் இடம் குறிப்பிடப்பட வில்லை.

(5) இது இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றி எதுவும் குறிப்பிடுவதில்லை. இது ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக் காரர்களால் யூகிக்கப்பட்டதாக உள்ளது.

(6) இது இயேசுவின் இரண்டாம் வருகைக்குப் பின்பு ஆயிரம் ஆண்டு அரசாட்சி இருக்கும் என்று கூறுவதில்லை. இது யூகிக்கப்பட்டதாக உள்ளது.

(7) இது இயேசு எருசலேமில் அரசாளுவார் என்று கூறுவதில்லை. எருசலேம் குறிப்பிடப்படவில்லை.

*(8) இது இயேசு தாவீதின் அரியணையில் அரசாளுவார் என்று கூறுவதில்லை. தாவீதின் அரியணை என்பது குறிப்பிடப்படவில்லை.*

*(9) இது இயேசுவின் அரியணையைப் பற்றி எதுவும் குறிப்பிடுவதில்லை. இரத்த சாட்சிகளாக மரித்த பரிசுத்தவான்களின் அரியணைகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது, இயேசுவின் அரியணையைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அரியணைகள் என்பவை, பரிசுத்தவான்கள் இனியும் நசுக்கப்பட்டிருப்பதில்லை, ஆனால் மனிதர்களின் மத்தியில் நடத்துனர்களாக மதிக்கப்படுவார்கள் மற்றும் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்று அறியப்படுவார்கள் என்பதன் அடையாளங்களாக உள்ளன. ஆவிக்குரிய இந்தக் கருத்தில், அவர்கள் அவருடன் ஆயிரம் ஆண்டுகள் காலம் ஆளுகை செய்வார்கள்; அவர்கள் நேர்ப்பொருளில், பூமிக்குரிய அரியணைகளில் வீற்றிருந்து ஆளுகை செய்வதில்லை.*

*(10) இது பரிசுத்தவான்கள் சரீர உயிர்த்தெழுதலைக் கொண்டிருப்பார்கள் என்று கூறுவதில்லை. அவர்களின் ஆத்துமாக்கள் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளன.*

*(11) இது மரித்த நீதிமான்கள் யாவரும் கிறிஸ்துவுடன் அரசாளுவார்கள் என்று கூறுவதில்லை. இரத்த சாட்சியாக மரித்த பரிசுத்தவான்கள் மாத்திரமே ஆளுகை செய்வார்கள் என்று கூறப்படுகிறது.*

*(12) இது அர்மகெதோன் யுத்தம் பற்றி எதுவும் குறிப்பிடுவதில்லை. சாத்தான், பரிசுத்தவான்களின் முகாமிற்கு எதிராகத் தொடங்க நாடும் யுத்தத்திலிருந்து அவனைத் தடை செய்வதற்காகத் தேவன் வானத்திலிருந்து அக்கினியை மழையாகப் பெய்யச் செய்வார். இந்த யுத்தம் உண்மையிலேயே அவ்விடத்தில்தான் நடைபெறும் என்று வெளி. 16:16 கூடக் கூறுவதில்லை. இது அவ்விடத்தில் ஒன்று கூட்டப்படும் சேனைகளைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகிறது: "அப்பொழுது எபிரெயு பாஷையில் அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்"*

*இவ்வசனப்பகுதி மிருகத்தை ஆராதிக்காமல் இரத்த சாட்சிகளாக மரித்தவர்களின் ஆத்துமாக்களைப் பற்றி பேசுகிறது (வ. 4). இவர்களே இயேசுவுடன் ஆயிரம் ஆண்டுகள் அரசாளுபவர்களாக விவரிக்கப்படுகின்றனர். இயேசு எவ்வளவு காலம் அரசாளுவார் என்று விவரிக்கப்படுவதில்லை - இரத்த சாட்சிகளாக மரித்தவர்கள் அவருடன் எவ்வளவு காலம் அரசாளுவார்கள் என்பதைப் பற்றி மாத்திரமே கூறப்படுகிறது. எனது உறவினர் ஒருவர் என் வீட்டில் இரண்டு ஆண்டுகள் என்னோடு வசித்தார் என்று நான் என் நண்பர் ஒருவரிடத்தில் கூறமுடியும். இந்தக் கூற்றிலிருந்து அவர், எனது உறவினர் என்னுடன் எவ்வளவு காலம் வசித்தார் என்று அறிய இயலும், ஆனால் நான் அந்த வீட்டில் எவ்வளவு காலம் வசித்தேன் என்பதை அவரால் அறிய இயலாது. இதே விஷயம் இயேசுவின் ஆளுகையைப் பொறுத்தமட்டிலும் உண்மையானதாக உள்ளது. இயேசு குறைந்தபட்சம் ஆயிரம் ஆண்டு (மற்றும் அதற்குக் குறைவான காலம் அல்ல) அரசாளுவார் என்பதை மாத்திரமே ஒருவர் பகுத்தறிய முடியும்; இருப்பினும் இந்தக் கூற்றானது அவரது ஆளுகையை ஆயிரம் ஆண்டுகளுக்கு மாத்திரம்*

வரையறைப்படுத்துவதில்லை. இவ்வசனப்பகுதியைப் பொறுத்தமட்டில், அவரது ஆளுகையானது ஆயிரமாயிரம் ஆண்டுகள் இருக்கக்கூடும். வெளி. 20ல் இயேசுவின் ஆளுகைக் காலத்தினுடைய அளவை அல்ல ஆனால் இரத்த சாட்சிகளாக மரித்த பரிசுத்தவான்களுடைய ஆளுகைக் கால அளவை மாத்திரமே நாம் அறிய முடிகிறது.

## பிற வேத வசனங்கள் கூறுவதென்ன

வெளி. புத்தகம் மிக உயர்வான அடையாள மொழிநடையைப் பயன்படுத்துகின்றபடியால், இந்தப் புத்தகம் பற்றிய எந்த ஒரு விளக்கமும் வேதவசனங்களின் நேரடியான வசனப்பகுதிகளின் போதனையை இசைவிப்பதாக இருக்க வேண்டும், இதற்கு நேர்மாறானதாக இருக்கக் கூடாது. வெளி. 20ஐ வேதாகமத்தினுடைய தெளிவான பிறபோதனை யுடன் இசைவிக்காத எந்த ஒரு விளக்கமும் கள்ள போதனையாக உள்ளது. ஆகையால் நாம், ‘‘இயேசுவின் ஆளுகை பற்றி வேதாகமத்தின் பிற வசனப்பகுதிகள் என்ன கூறுகின்றன?’’ என்று கேட்போமாக.

ரோம ஆட்சியாளர்களின் காலத்தில் தேவனுடைய ராஜ்யம் அமைக்கப்படும் என்று தீர்க்கதரிசனம் முன்னுரைத்தது (தானி. 2:44). நேபுகாத்நேச்சாரின் கனவில் வந்த நான்கு ராஜ்யங்கள், பாபிலோன், மேதிய-பெர்சியா, கிரேக்கம் மற்றும் ரோமாபுரி ஆகியவைகளாகும். அந்தக் கனவில் வந்த சிலையின் பாதங்களும் கால்விரல்களும் இரும்பு களி மண்ணுடன் கலந்து செய்யப்பட்டிருந்ததாகச் சித்தரிக்கப்பட்டிருந்தன. கனவு பற்றி தானியேல் கூறிய விளக்கத்தின்படி, இந்தக் கலவையானது, ராஜ்யத்தின் சில பகுதி பலம் வாய்ந்ததாகவும் மற்ற பகுதிகள் நொறுங்கக் கூடியதாகவும் இருக்கும் என்று சுட்டிக்காண்பித்தது (தானி. 2:42). இந்த பாகங்கள் “அவர்கள் மற்ற மனுஷரோடே சம்பந்தங்கலப்பார்கள். ஆகிலும் … அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொள்ளாதிருப்பார்கள்” (தானி. 2:43). இது ரோமப் பேரரசு பற்றிய நல்ல விவரிப்பாக இருக்கிறது. தேவனு டைய ராஜ்யம் ரோம ஆட்சியாளர்களின் நாட்களில் தொடங்கும் என்பதே இந்தத் தீர்க்கதரிசனத்தின் மறைபொருளாக உள்ளது.

வரவிருந்த ராஜ்யத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஆயத்தமானது, அது ரோம ஆட்சியாளர்களின் நாட்களில் அமைக்கப்படும் என்பதை மறைமுக மாய் உணர்த்திற்று. ரோமாபுரி அதிகாரத்தில் இருந்த வேளையில் இந்த பூமியில் வாழ்ந்த இயேசு, “காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று” என்று கூறினார் (மாற். 1:15). “காலம் நிறைவேறிற்று” என்று கூறியதன்மூலம் இயேசு, தீர்க்கதரிசிகளால் குறிப்பிடப்பட்டிருந்த காலம் யாவும் கடந்து சென்றது மற்றும் தேவனுடைய ராஜ்யம் தொடங்குவதற் கான வேளை இப்போது வந்திருக்கிறது என்று போதித்தார். ராஜ்யம் சமீபித்திருந்ததாக யோவான் ஸ்நானன் போதித்தார் (மத். 3:2). ராஜ்யம் சமீபித்திருப்பதாகப் பிரசங்கிக்கும்படி இயேசு பன்னிருவருக்கும் (மத். 10:7) எழுபது பேருக்கும் (லூக். 10:9, 11) அறிவுறுத்தினார். ராஜ்யம் வல்லமை யோடே வருவதைப் பார்க்குமுன்பு சிலர் மரிக்கமாட்டார்கள் என்றும்

அவர் கூறியிருந்தார் (மாற். 9:1). ரோமப் பேரரசின் நாட்களில் ராஜ்யம் அமைக்கப்படவில்லை என்றால், தானியேல், யோவான், இயேசு, பன்னிருவர் மற்றும் எழுபது பேர் ஆகியோர் யாவரும் கள்ளத்தீர்க்க தரிசிகளாக இருந்தனர் என்றாகிறது (உபா. 18:22). இவர்கள் யாவரும் கள்ளத்தீர்க்கதரிசிகள் என்றால், கிறிஸ்தவம் முழுவதும் வலிவற்றதாகவும் நமது ஆழ்ந்த சிந்தனைக்குத் தகுதியற்றதாகவும் ஆகிறது.

கிறிஸ்துவின் முதல் வருகையைத் தோல்வியாக்குகிற எந்த ஒரு அமைப்பும் - கிறிஸ்து வாக்குத்தத்தம் செய்தபடியும் அவரது பின்பற்றாளர் கள் பிரசங்கித்தபடியும் அவரது ராஜ்யத்தின்மேல் ஆளுகை செய்ய அவர் பரத்திற்கேறிச் செல்லவில்லை என்றால் - அது தவறானதாக இருக்க வேண்டும். அவர் முதல்முறை அதைச் செய்யத் தவறிவிட்டார் என்றால், அவர் மீண்டும் வந்தால் வெற்றியடைவார் என்று நாம் ஏன் எதிர்பார்க்க வேண்டும்?

இயேசு, வானம் பூமி ஆகியவற்றின்மீது அதிகாரமுள்ளவராய் தேவனு டைய வலது கரத்துக்கு ஏறிச் சென்றபோது, அவருடைய உண்மையான ஆளுகை தொடங்கியது.[1] இது மனுஷ குமாரனுடைய சாயலுள்ளவர் நீண்ட ஆயுசுள்ளவரிடத்திற்கு ஏறிச் சென்று என்றென்றைக்கும் அழியாத ராஜ்யத்தைப் பெற்றுக்கொள்வார் என்ற தானியேலின் தீர்க்கதரிசனத்தை (தானி. 7:13, 14) நிறைவேற்றியது. ராஜ்யத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பிவரும்படி சென்ற பிரபு பற்றிய உவமையில் இயேசு போதித்தவை அவரையே குறிப்பிட்டன (லூக். 19:12-15). இயேசு இங்கிருந்து சென்ற போது தமது ராஜ்யத்தைப் பெறுவதற்காகவே சென்றார்.

பூமிக்குரிய ஒரு ராஜ்யத்தின்மீது இயேசு அரசாளுவார் என்று எதிர் பார்க்கின்றவர்கள் அவரது ராஜ்யத்தின் இயல்பைப் புரிந்துகொள்வதில்லை. இயேசு, தமது ராஜ்யம் இவ்வுலகத்துக்கு அடுத்ததல்ல என்று உரைத்தார் (யோவா. 18:36). அவரது ஆளுகையானது பூமிக்குரிய ஆளுகையாக இராதபடியால், அது பரலோக ஆளுகையாகவே இருக்க வேண்டும்.

இயேசுவைப் பற்றி சகரியா, "தம்முடைய சிங்காசனத்தின்மேல் ஆசாரியராயும் இருப்பார்" என்று தீர்க்கதரிசனம் உரைத்தார் (சக. 6:13). எபிரெயர் 8:4, "பூமியிலே அவர் இருப்பாரானால் ஆசாரியராயிருக்க மாட்டார்" என்று கூறுகிறது. அவர் பூமியிலே ஆசாரியராயிருக்க இயலாது என்றால், அவர் பூமியின்மீது ஆளுகை செய்ய[வும்] இயலாது, ஏனெனில் அவர் தமது சிங்காசனத்தின்மீது ஆசாரியராயிருப்பார் என்று தீர்க்கதரிசனம் அறிவித்தது. அவர் பூமியில் ஆசாரியராயிருக்க இயலாது என்பதால், பரலோகம் மாத்திரமே அவர் ஆசாரியராயிருக்கக் கூடிய இடமாக உள்ளது; ஆகையால், அவர் பரலோக சிங்காசனத்தில் இருந்தே ஆளுகை செய்ய இயலும். பரலோகம் என்பதே அவர் ஏறிச் சென்ற இடமாகவும் இப்போது இருந்து ஆளுகை செய்கின்ற இடமாகவும் உள்ளது (1 பேது. 3:22).

தேவனுடைய ராஜ்யம் என்பது புசிப்பும் குடிப்பும் உள்ள பூமிக்குரிய ராஜ்யம் போன்றதல்ல, ஆனால் அது பரிசுத்த ஆவியானவருக்குள் நீதியும், சமாதானமும் சந்தோஷமும் உள்ள ராஜ்யமாகும் என்று பவுல் எழுதினார் (ரோமர் 14:17), இது எதிரிகளான விலங்குகள் சமாதானமாக ஒன்றுகூடி

*வாழ்கின்றதாக தீர்க்கதரிசனத்தில் உருவகத்தின்மூலம் சித்தரிக்கப்பட்ட சமாதானம் நிறைந்த ராஜ்யமாக உள்ளது (ஏசா. 11:6, 7). ராஜ்யம் என்ற வகையில் இது நீதிக்காகத் துன்புறுத்தப்பட்டவர்களுக்குரியதாக உள்ளது (மத். 5:10).*

*ராஜ்யம் உலகளாவிய ஒரு மாபெரும் யுத்தத்துடன் தொடங்காது ஆனால் ஒரு கடுகுவிதை வளரத் தொடங்குவதுபோல் தொடங்க வேண்டியதாக இருந்தது, மற்றும் இது தன்னைச் சுற்றிலும் இருப்பவர் களைப் புளித்தமாவானது பொதியப்பட்ட மாவின்மீது செலுத்துவது போன்ற செல்வாக்கைச் செலுத்த வேண்டியதாயிருந்தது (மத். 13:31-33). பட்டயமோ அல்லது இராணுவத்தின் வேறு எந்தத் தளவாடமோ அல்ல ஆனால் தேவனுடைய வசனமே இதன் விரிவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாயிருக்கும் (மத். 13:19; லூக். 8:11). இவ்விதமாகவே இது பரவும், ஏனென்றால் இது பூமியிலுள்ள அரசு ஒன்றின் மூலம் தேவனுடைய ஆளுகையாயிராமல், மனிதருடைய இருதயத்தில் தேவனுடைய ஆளுகை யாக இருக்கும். "தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. 'இதோ, இங்கே என்றும்,' 'அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது,' இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே" (லூக். 17:20, 21).*

*பவுல் கொலோசெயருக்கு நிருபத்தை எழுதியபோது ராஜ்யம் இருந்தது. அவர், கிறிஸ்தவர்களைத் தேவன் இருளினின்று விடுதலையாக்கி, இயேசுவின் ராஜ்யத்திற்கு உட்படுத்தினார் என்று எழுதினார் (கொலோ. 1:13), இது இயேசுவின் ராஜ்யம் இல்லாதிருந்தால் சாத்தியமாகியிருக்காது. மேலும் அவர், தேவன் தவிர மற்ற யாவும் ஏற்கனவே இயேசுவின் கீழ் வைக்கப்பட்டிருந்ததாகக் கூறினார் (1 கொரி. 15:26-28). கிறிஸ்தவ யுகமாகிய தற்காலத்தில், நாம் இயேசுவின் ராஜ்யத்தில் உறுப்பினர்களாக முடியும் (யோவா. 3:3-5), இது பரலோகம் மற்றும் பூலோகம் முழுவதிலும் பரந்துள்ள ராஜ்யமாக உள்ளது (மத். 28:18).*

*இயேசு தமது மறுவருகையில், தமது ஆளுகையைத் தொடங்குவதற் கென்று வரமாட்டார், ஏனெனில் அவர் இப்போதே எல்லாவற்றின்மீதும் ஆளுகை செய்கின்றார் (1 கொரி. 15:27). அவர் மீண்டும் வரும்போது, அவர் மரித்தோரை எழுப்புவார், தமது ஆளுகையை முடிப்பார் மற்றும் ராஜ்யத்தைப் பிதாவினிடம் ஒப்புவிப்பார் (1 கொரி. 15:22-28).*

*இயேசு இப்போது வானத்திலும் பூமியிலும் ஆளுகை செய்து கொண்டிருக்கின்றார் என்று வேத வசனங்கள் தெளிவாகப் போதிக்கின்றன. அவர் மீண்டும் வரும் வரையில் இவ்வாறு ஆளுகை செய்வார், பின்பு முடிவு வரும் (1 கொரி. 15:24-27). இப்படிப்பட்ட தற்கால ஆளுகையானது இயேசு வுக்கு இந்த பூமியின்மீது ஆயிரம் ஆண்டுகள் ஆளுகை செய்வதற்கான வேளையை அனுமதிப்பதில்லை. இயேசு ஆயிரம் ஆண்டுகள் அரசாளு வதற்காகப் பூமிக்குத் திரும்பி வருவார் என்று வேதாகமம் எவ்விடத்திலும் கூறுவதில்லை. அவர் தமது உயிர்த்தெழுதலுக்குப்பின்பு பிதாவினிடத்தில் ஏறிச் சென்றபோது அவரது ஆளுகை தொடங்கி விட்டது. இவ்வளவு அதிகமான வேத வசனங்களை மீறுகிற எந்த யூகமும் மற்றும் விளக்கமும்*

*தவறானதாக இருக்க வேண்டும்.*

## *வெளி. 20:1-10 அர்த்தப்படுத்துவது என்ன*

*வெளி. 20:1-10 அர்த்தப்படுத்துகிற யாவற்றையும் குறித்து நாம் நிச்சயமற்றவர்களாய் இருந்தாலும், இவ்வசனப்பகுதி எதைக் கூறுவதில்லை என்பதில் நாம் நிச்சயமுள்ளவர்களாய் இருக்கிறோம். இது, எருசலேமில் தாவீதின் நேரடியான அரியணையில் இருந்து கொண்டு ஆயிரம் ஆண்டுகள் ஆளுகை செய்வதற்காக இயேசு பூமிக்குத் திரும்ப வருவார் என்று கூறுவதில்லை.*

*இவ்வசனப்பகுதியானது நேர்ப்பொருளில் அல்ல ஆனால் அடையாளத்துவமாகவே விளக்கப்படுத்தப்பட வேண்டும் என்பது தெளிவாக உள்ளது. நேரடியான ஒரு திறவுகோலும் சங்கிலியும் ஆவிக்குரிய ஜீவியான சாத்தானை எவ்வாறு கட்டிப்போட முடியும்? ஆத்துமாக்கள் நேரடியான சிங்காசனங்களில் அமர இயலுமா? வெளி. புத்தகம் முழுவதும் அடையாளத்துவ மொழியில் குவிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரம் மட்டும் அதற்கு ஒரு விதிவிலக்காகக் கருதப்பட வேண்டியது ஏன்?*

*இவ்வசனப்பகுதியின் அர்த்தம் வெளி. புத்தகத்தின் முந்திய பகுதியிலேயே (6:9-11) விரிக்கத் தொடங்கப்பட்டிருக்கலாம். பலிபீடத்தின்கீழ் இருந்த ஆத்துமாக்கள், 20:4ல் சிங்காசனங்களில் இருந்த அதே குழுவாக உள்ளனர். அவர்கள் தங்கள் இரத்தத்திற்குப் பழிதீர்க்கப்பட இன்னும் எவ்வளவு காலம் ஆகும் என்று கேள்வியெழுப்பினர் (6:10). இது நடைபெறும் முன்னர் அவர்கள் சற்றுக்காலம் இளைப்பாறியிருக்க வேண்டும் என்று அவர்களுக்குப் பதில் கூறப்பட்டது (6:11). பரிசுத்தவான்களின் இரத்தத்தைக் குடித்து வெறிகொண்டிருந்த (17:5, 6, 18), நாடுகளின்மீது ஆளுகை செலுத்திய (17:15) மகா நகரமாகிய (17:18) பாபிலோனின் வீழ்ச்சியில் அவர்களின் இரத்தத்திற்குப் பழிதீர்க்கப்பட்டது என்று கூறப்படுகிறது (18:2). ரோமாபுரி என்று தெளிவாகக் காணப்படக் கூடிய (17:9, 18) மற்றும் உபத்திரவப்படுத்திய இம்மாநகரின் வீழ்ச்சிக்குப் பின்பு, கிறிஸ்தவர்கள் எதை எதிர்பார்க்க முடிந்திருந்தது? இதற்கு அதிகாரம் 20 பதில் தருகிறது. சாத்தான் நீண்ட காலத்திற்குக் கட்டி வைக்கப்படுவான், மற்றும் பரிசுத்தவான்கள் “பலீபீடத்தின் கீழ்” அடக்கி வைக்கப்பட்டிருப்பதற்குப் பதிலாக “சிங்காசனங்களில்” ஆளுகை செய்வார்கள்.*

*சாத்தானைக் கட்டிவைத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? அவன் கட்டவிழ்க்கப்பட்டிருத்தலென்பது அவன் கட்டிவைக்கப்பட்டிருத்தல் என்பதற்கு எதிரானதாக இருக்க வேண்டும். அவன் கட்டவிழ்க்கப்பட்டபோது, உடனடியாக நாடுகளை ஒன்றுகூட்டி அவற்றைப் பரிசுத்தவான்களின் முகாமிற்கு எதிராகக் கொண்டுவர நாடினான் (20:7-9). அவன் கட்டிவைக்கப்படுதல் என்பது, அவன் கட்டிவைக்கப்படுவதற்கு முன்பு செய்ததுபோல் ஆயிரம் ஆண்டுகள் அளவுக்கு அவனால் நாடுகளைப் பரிசுத்தவான்களுக்கு எதிராகக் கொண்டுவர முடியாதிருந்தது என்பதை அர்த்தப்படுத்த வேண்டும்.*

*ஆயிரம் ஆண்டுகள் என்பது ஒரு நீண்ட கால வேளைக்கான*

*அடையாளத்துவமாக இருக்கலாம். தேவன், "பர்வதங்களில் ஆயிரமாயிர மாய்த் திரிகிற மிருகங்களை" சொந்தம் கொண்டுள்ளார் (சங். 50:10), மற்றும் தேவனுடைய பிரகாரங்களில் ஒரு நாள் என்பது "[வெளியில் செலவிடும்] ஆயிரம் நாளைப் பார்க்கிலும்" நல்லதாக உள்ளது (சங். 84:10). இவ்வசனப் பகுதிகளில் உள்ள "ஆயிரம்" என்பது பெரிய எண்ணிக்கையைக் குறிக்கிறது என்பது உறுதி. வெளி. 20:2-7ல் உள்ள "ஆயிரம்" என்பது நேர்ப்பொருளில் எடுத்துக் கொள்ளப்படக் கூடும்போது, அடையாளங்களால் நிறைந்த புத்தகம் ஒன்றில் ஒரு எண்ணிக்கை தோன்றுகையில் அதை நாம் நேர்ப் பொருளில் எடுத்துக் கொள்வதற்கு நாம் கொண்டுள்ள பகுத்தறிவு என்ன?*

*இரத்த சாட்சிகளாக மரித்தவர்களின் ஆத்துமாக்கள் "சிங்காசனங் களில்" இருந்தன என்பது, ஆயிரம் ஆண்டு காலத்தில் அவர்களின் செயல் நிலையானது ஜீவனும் வெற்றியும் உள்ளதாக இருக்கும் என்பதை அடையாளப்படுத்துகிறது. அவர்கள் "கொஞ்சக் காலம் பலிபீடத்திற்குக் கீழே" இருந்த வரையிலும், அவர்களின் சக கிறிஸ்தவர்களைக் கொலை செய்தல் என்பது தொடர்ந்து நடைபெறும் (6:11). அவர்களுக்கு "சிங்காசனங்கள்" தரப்பட்டிருத்தல் என்பது (20:4) அந்த "கொஞ்சக் காலம்" என்பது முடிவு பெற்றிருந்தது, மக்களினங்கள் பரிசுத்தவான்களைக் கொலைசெய்தல் என்பது நின்று போயிருந்தது, உபத்திரவப்படுத்துதலில் இருந்து ஆயிரம் ஆண்டுகள் ஓய்ந்திருத்தல் தொடங்கிற்று என்று அர்த்தப்படுத்துவதாக இருக்க வேண்டும்.*

*இவ்வசனப்பகுதியில், ezesan[2] என்ற கிரேக்க வார்த்தை "உயிருடன் இருந்தார்கள்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. "உயிரடைந்தார்கள்" என்பது வினைச்சொல்லை நியாயப்படுத்துவதோ அல்லது சந்தர்ப்பப் பொருளில் பொருந்துவதோ இல்லை. இந்தக் காரணத்தினால், இந்த ஆத்துமாக்கள் "உயிருடன் வந்தனர்" என்று கூறமுடியாது. இருப்பினும், "உயிருடனிருந்தார்கள்" என்பது மிகச் சரியானதாக உள்ளது, ஏனெனில் முன்னதாக யோவான், இதே குழுவினர் "பலிபீடத்தின் அடியில் இருந்தனர்" (6:9, 10) மற்றும் உணர்வுடன் இருந்தனர் என்று சுட்டிக்காண்பித்தார்.*

*இதே வார்த்தையையும் வினைச்சொல்லையும் பவுல், தாம் கிறிஸ்தவ ராவதற்கு முன்பு தமது வாழ்வின் நிலை பற்றிக் குறிப்பிடப் பயன் படுத்தினார். அவர், "பரிசேயனாய் நடந்தேன்" (அப். 26:5) என்று கூறினார். அவரது கூற்று, அவர் ஒரு பரிசேயராக ஜீவனுக்குள் வந்தார் என்று அர்த்தப் படுவதில்லை, மாறாக அது, அவர் கிறிஸ்தவராகும் முன்பு எவ்வாறு வாழ்ந் தார் என்பதை அர்த்தப்படுத்துகிறது. இரத்த சாட்சிகளின் மரணத்தின் போது கிறிஸ்தவம் மரிப்பதற்குப் பதிலாக, கிறிஸ்தவர்களின் இரத்தத்திற் காகப் பழிதீர்த்துக் கொள்ளப்படும். இவ்வாறு கிறிஸ்தவ சமுதாயமானது கிறிஸ்துவுடன் சமாதானமாக ஒரு நீண்ட காலம் "வாழ்ந்து அரசாளும்" என்று கூறப்படும். ஜெயங்கொண்டு கிறிஸ்துவுடன் ஆயிரம் ஆண்டு காலம் அரசாளுபவர்கள் "முதலாம் உயிர்த்தெழுதலுக்கு" பங்குள்ளவர்களாய் இருக்கின்றனர் (வெளி. 20:5). இஸ்ரவேல் தேசம் மரித்ததுபோல் தோன்றிய வேளையிலும் (எசே. 37:1-14), தேவன் அதை வாழ்வித்தது போல் அவர் கிறிஸ்தவத்தை வாழச் செய்வார். துன்புறுத்துதலை எதிர்கொண்டிருந்த*

*பரிசுத்தவான்கள், தங்கள் விசுவாசம் இல்லாதொழியும் அளவுக்கு உபத்திரவப்படும் என்று அஞ்சியிருக்கலாம்; ஆனால் அவர்கள், தங்களை உபத்திரவப்படுத்திய ரோமாபுரியின் அழிவுக்குப் பின்பு நீண்ட கால வேளை கிறிஸ்துவுடன் சமாதானத்தில் ஆளுகை செய்வார்கள்.*

*அவர்களின் உபத்திரவப்படுத்துதலைத் தூண்டிவிட்ட சாத்தான் கட்டுப்படுத்தப்படுவான், பரிசுத்தவான்களின் இரத்தத்திற்காக மாபெரும் நகரம் வீழ்ச்சியடைய வைத்துப் பழிதீர்த்துக் கொள்ளப்படும், மற்றும் கிறிஸ்தவம், நாடளாவிய உபத்திரவத்தின் அலைகள் எதுவுமின்றி நீண்ட காலம் வாழும். அதன் பின்பு, சற்று காலம் சாத்தான் விடுதலையாவான், அவன் உபத்திரவப்படுத்துதலின் இன்னொரு அலைக்குள் நாடுகளை வழிநடத்துவான்; ஆனால் தேவன் அவனது முயற்சியை தடுத்து நிறுத்தி அவனை அக்கினிக்கடலுக்குள் தள்ளுவார் (20:3, 7-10).*

*“இரண்டாம் மரணம்” (20:6) என்பது இன்னொரு மரணத்தைத் தொடர்ந்து வரும் இரண்டாம் உயிர்த்தெழுதலை மறைமுகமாகக் குறிப்பிடுவதில்லை. “இரண்டாம் மரணம்” என்பது “அக்கினிக் கடலில்” (20:14) தண்டனையின் அடையாளத்துவமாக உள்ளது. முதலாம் மரணம் உடல்ரீதியான மரணமாக உள்ளது, இரண்டாம் மரணம் அக்கினிக்கடலில் பங்கடைவதாக உள்ளது.*

## *முடிவுரை*

*எதிர்காலத்தில் இயேசு பூமியில் ஆயிரம் ஆண்டுகள் அரசாளுவார் என்பதற்குப் பதிலாக, அவர் இப்போது பரலோகத்தில் இருந்துகொண்டு, வானத்திலும் பூமியிலும் பரவியுள்ள தமது இராஜ்யத்தை ஆளுகை செய்து கொண்டிருக்கின்றார் என்று வேதாகமம் போதிக்கிறது. ராஜாவாகிய இயேசு இப்போது தமது விண்ணக அரியணையில் வீற்றிருக்கின்றார், அவர் பிதாவினிடத்தில் ஏறிச் சென்றது முதல் இந்த இடத்திலிருந்து ஆளுகை செய்து கொண்டுள்ளார். அவர் மீண்டும் வரும்போது, அவர் பூமியில் ஆயிரம் ஆண்டு அரசாட்சியைத் தொடங்குவதற்காக வரமாட்டார்; மாறாக, அவர் தமது தற்போதைய ஆளுகையை முடிப்பதற்காகவே வருவார். இந்தக் கண்ணோட்டத்திற்கு எதிராகக் கட்டியெழுப்பப்படும் எந்த விளக்கமும், நேரடியான வசனங்களின் அடையாளத்துவ மொழி நடையின் மிகச் சரியானதாயிராத விளக்கமாகவும் அவற்றிற்கு நேரெதிரானதாகவும் உள்ளது.*

---

*குறிப்புகள்*

*[1]மத். 28:18; அப். 2:33, 34; 5:31; ரோமர் 8:34; எபே. 1:20-23; எபி. 1:3; 1 பேது. 3:22 ஆகிய வசனங்களைக் காணவும். [2]Ezesan என்பது சுட்டுவினையாக, ஒருமுறை மாத்திரம் வருகிற, zao என்ற வேர்ச்சொல்லில் இருந்து வருகிற செய்வினையாக உள்ளது. இது ‘‘உயிருடன் இருந்தவர்கள்’’* (“lived”) *என்றும்* (KJV, RSV) *‘‘உயிரடைந்தவர்கள்’’* (“came to life”) *என்றும்* (NIV, NASB) *மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*